# டிரினிடி மகளிர் கல்லூரி
# (கலை&அறிவியல்)
# நாமக்கல் – 637002.

தமிழாய்வுத்துறை

2023 -2024 ஆம் கல்வியாண்டு (இரட்டைப் பருவம்)

இளநிலை முதலாமாண்டு

## பொதுத்தமிழ் II(23UFTA02)

வழங்கியவர்

**க. பத்மாவதி**

**உதவிப் பேராசிரியர்**

**தமிழ்த்துறை.**

**http://www.trinitycollegenkl.edu.in/**

# சிற்றிலக்கியங்கள்

1. அறம் பொருள் இன்பம் என்ற மூன்று பொருள்களில் ஒன்றைச் சார்ந்து வருவது.

2. தெய்வங்களின் அருள் சிறப்பு, மன்னர்கள் வெற்றி வீரம், வள்ளல்களின் கொடைச்சிறப்பு இவற்றையெல்லாம் பாடுபொருளாகக் கொண்டு பாடுவது ஆகும்.
3. குறைந்த பாடல் அடிகளைக் கொண்டு பாடப்படுவது.

## சிற்றிலக்கியம் விளக்கம்

1. பாட்டுடைத் தலைவனின் வாழ்வில் ஒருபகுதியைக் கொண்டு மட்டும் சிறிய பாடல் அடிகளால் பாடப்படும்.
2. எளிமையான எல்லா யாப்புகளாலும் பாடப்படும்
3. சிற்றிலக்கியங்களுக்கு பிரபந்தம் என்ற சொல் வழங்கப்படுகிறது.
4. பாட்டியல் நூல்கள் சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணம் கூறுகிறது.

## சிற்றிலக்கியங்களின் வகைகள்

1. சிற்றிலக்கியங்கள் மொத்தம் 96 என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.
2. சிற்றிலக்கியங்கள் 96 வகை என்று முதலில் கூறிய நூல் பிரபந்த மரபியல்.
3. பாட்டியல் நூல்களும் 96 என்றே குறிப்பிடுகின்றன.
4. பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள் இவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இலக்கிய வகை சிற்றிலக்கியங்கள் ஆகும்.

# சிற்றிலக்கியங்கள் வகைகள்

1. ஆற்றுப்படை
2. அந்தாதி
3. மாலை
4. பதிகம்
5. கோவை
6. உலா
7. பரணி
8. கலம்பகம்
9. பிள்ளைத்தமிழ்
10. தூது
11. சதகம்
12. மடல்
13. பள்ளு
14. குறவஞ்சி

எனும் 14 வகை சிற்றிலக்கியங்கள் தமிழில் புகழ் பெற்றவையாக உள்ளன.

# சிற்றிலக்கியங்களின் நோக்கங்கள்

1. தெய்வங்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள் ஆகியோரைப் பாடுவது.
2. சிலேடை என்ற இருபொருள் அமையப் பாடுவது.
3. புலவர்கள் தங்கள் திறனை வெளிக்காட்டுவதற்காகப் பாடப்படுவது.
4. எளிமையாகப் புரிந்துகொள்ளும் பாடல்களாக சிறு செய்திகளை உள்ளடக்கி வரும் இலக்கியமாக அமைகிறது.

# சிற்றிலக்கியக் காலம்

1. சங்ககாலத்திலேயே தோன்றிவிட்டது எனலாம். சங்க இலக்கியத்தை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனப் பிரிக்கலாம்.
2. பத்துப்பாட்டில் 5 நூல்கள் ஆற்றுப்படை என்னும் சிற்றிலக்கியமாக உள்ளது.
3. கிபி.15-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு வரை சிற்றிலக்கிய வகைகள் மேலோங்கி நின்றன.

## தமிழில் சிற்றிலக்கிய விதை

1. தமிழின் முதல் நூலாம் தொல்காப்பியத்தில் சிற்றிலக்கியக் கூறுகள் இடம் பெறுகின்றன.

2. பக்தி இயக்க காலத்திலும் சிற்றிலக்கியத்தின் வளர்ச்சி உயர்ந்த நிலையை அடைந்து, நாயக்கர்களின் காலத்தில் சிற்றிலக்கியங்கள் அதிகமாகத் தோன்றின.

3. சிற்றிலக்கியங்களில் அந்தாதி, தூது, உலா, கோவை, கலம்பகம், பரணி, பிள்ளைத்தமிழ், பள்ளு, குறவஞ்சி, அம்மானை போன்ற வகைகள் குறிப்பிடத்தக்கன.

# சிற்றிலக்கியங்களின் சிறப்புகள்

**கலம்பகம்** - பலவகை உறுப்பும் பொருளும், பாட்டும் கலந்து பாடப்பெறுவது.

**உலா** - உலகைக் காக்கும் இறைவனின் திருவுருவோ, அரசனோ, உலகம் போற்றும் ஒரு வள்ளலோ, யானை, குதிரை, தேர் முதலிய வாகனங்களில் ஏறி வர, மங்கல இசைக்கருவிகள் முழங்க, வீதியில் உலா வருவதாகவும், பேதை. பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்ற ஏழு பருவ மகளிரும் அவரைக் கண்டு காதல் கொண்டு வருந்துவதாக அமைவது.

**பிள்ளைத்தமிழ்** – பத்துப்பருவங்களாகப் பாடப்படுவது.

**பரணி** - போர்கள வெற்றியைப் பாடுவது.

**பள்ளு** - உழவர்களின் வரலாற்றை கொண்டு பாடுவது.

**தூது** - அகம், புறம் என்று இரண்டாக அமையும்.

**குறவஞ்சி** - குறத்தி தலைவிக்கு குறி சொல்வது.

**அந்தாதி** - முதல் பாடலின் இறுதி அடுத்த அடியின் முதலாகக் கொண்டு பாடுவது.

# நன்றி.

http://www.trinitycollegenkl.edu.in/